


**09.04.2025**

**தலைப்பு செய்திகள்**

**1.** உள்நாட்டு பொருட்களின் உற்பத்தி ஊக்குவிக்கப்பட வேண்டும் என்று பிரதமர் திரு.நரேந்திரமோடி வலியுறுத்தியுள்ளார்.

**2.** உதகை வியாபாரிகளுக்கு சட்ட ரீதியிலான உதவிகள் வழங்கப்படும் என்று மத்திய அமைச்சர் டாக்டர் எல்.முருகன் தெரிவித்துள்ளார்.

**3.** மறைந்த காங்கிரஸ் மூத்த தலைவர் குமரி அனந்தனின் உடல் அரசு மரியாதையுடன் அடக்கம் செய்யப்படும் என்று முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

4. தமிழக அரசு தொழில்பயிற்சி நிலைய விடுதிகள் மேம்படுத்தப்படும் என்று மாநில தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.சி.வி.கணேசன் தெரிவித்துள்ளார்.

**5.** திருச்சி மாவட்டம் மணப்பாறை பொன்னணி ஆறு 12 ஆண்டுகளுக்கு பின்னர் பாசனத்திற்காக இன்று திறக்கப்பட்டுள்ளது.

**இனி விரிவான செய்திகள்**

**********

**பிரதமர்**

உள்நாட்டு பொருட்களை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று பிரதமர் திரு.நரேந்திரமோடி வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் ஜைன சமய நிகழ்ச்சியில் இன்று உரையாற்றிய பிரதமர் இந்தியாவில் தயாரிக்கும் பொருட்களை உலக நாடுகள் அதிக அளவில் வாங்க வேண்டும் என்று விருப்பம் தெரிவித்தார்.

நீர் சேமிப்பு, அன்னையின் பெயரில் மரம் வளர்ப்பது, தூய்மை இயக்கம், உள்ளூர் பொருட்களுக்கு குரல் கொடுப்பது, உள்நாட்டு சுற்றுலாவை மேம்படுத்துவது, இயற்கை வேளாண்மை, ஆரோக்கியமான வாழ்க்கை முறை, யோகா மற்றும் விளையாட்டுகளில் ஈடுபடுவது, ஏழைகளுக்கு உதவுவது போன்ற 9 தீர்மானங்களை மக்கள் மேற்கொள்ள வேண்டியதன் அவசியத்தை பிரதமர் வலியுறுத்தினார்.

வளர்ச்சி அடைந்த இந்தியாவை எட்ட இது வழிகோலும் என்றார்.

காலநிலை மாற்ற சவால்களை எதிர்கொள்ள நீடித்த நிலையான வாழ்க்கை முறையே தீர்வாகும் என்றார்.

ஜைன மதத்தினர் இதனை பல நூற்றாண்டுகளாக கடைபிடிப்பதாக கூறிய அவர் இது இந்தியாவின் வாழ்க்கை இயக்கத்தோடு பிணைந்துள்ளதாக பிரதமர் எடுத்துரைத்தார்.

**********

**எல்.முருகன்**

பழங்குடியின மாணாக்கர், அரசு பள்ளி மாணாக்கர் உள்ளிட்டோர் அதிக அளவில் நீட் தேர்வில் தேர்ச்சி பெறுவதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் டாக்டர் எல்.முருகன் தெரிவித்துள்ளார்.

உதகையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் டாஸ்மாக் ஊழலை திசை திருப்பவே அனைத்து கட்சி கூட்டம் போன்றவற்றை தமிழக முதலமைச்சர் நடத்துவதாக குறை கூறினார்.

இ-பாஸ் முறையால் பொதுமக்களும், சுற்றுலா பயணிகளும் பாதிக்கப்படுவதாக வணிக சங்கத்தினர் மனு அளித்ததை சுட்டிக்காட்டிய அவர், இந்த விவகாரம் நீதிமன்றத்தில் உள்ளதால் சட்ட ரீதியிலான உதவிகளை செய்ய தயாராக உள்ளதாக குறிப்பிட்டார்.

சுற்றுலா பயணிகளும் பொதுமக்களும் பாதிக்காத வகையில் அடிப்படை வசதிகளை மேம்படுத்தி வியாபாரிகளின் வாழ்வாதாரத்தை உறுதி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

வக்.ஃப் வாரிய சட்ட திருத்தத்தால் மேலாண்மை மற்றும் நடைமுறைகள் எளிதாகி உள்ளதால் இஸ்லாமியர்கள் அதனை ஏற்றுக்கொண்டிருப்பதாகவும், டாக்டர் முருகன் தெரிவித்தார்.

**********

**முதலமைச்சர் - நீட்**

தமிழ்நாட்டில் நீட் தேர்வு தொடர்பான அனைத்து சட்டப்பேரவை கட்சி தலைவர்களின் கூட்டம் முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் தலைமையில் சென்னை தலைமை செயலகத்தில் இன்றுமாலை நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் அஇஅதிமுக பங்கேற்காது என அக்கட்சியின் பொதுச்செயலாளர் திரு.எடப்பாடி கே.பழனிச்சாமி தெரிவித்துள்ளார்.

**********

**ரிசர்வ் வங்கி**

ரிசர்வ் வங்கி பிற வங்கிகளுக்கு வழங்கும் கடனுக்கான வட்டி விகிதம் 25 அடிப்படை புள்ளிகள் குறைக்கப்பட்டு 6 சதவிகிதமாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

மும்பையில் இன்று வங்கியின் நிதிக்கொள்கையை வெளியிட்டு பேசிய வங்கி ஆளுநர் திரு.சஞ்சய் மல்ஹோத்ரா நடப்பு நிதியாண்டின் முதல் கூட்டத்தில் 6 உறுப்பினர் குழு வட்டி விகிதத்தை குறைப்பதற்கான முடிவை ஒருமனதாக மேற்கொண்டதாக குறிப்பிட்டார்.

நடப்பாண்டிற்கான ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தி 6.5 சதவிகிதமாக இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

முன்னதாக இது 6.7 சதவிகிதமாக இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது..

பண வீக்க விகிதம் நடப்பாண்டில் 4 சதவிகிதமாக இருக்கும் என்றும், திரு.சஞ்சய் மல்ஹோத்ரா கூறியுள்ளார்.

**********

**குமரி அனந்தன்**

காங்கிரஸ் கட்சியின் முதுபெரும் தலைவர் குமரி அனந்தன் வயது மூப்பு காரணமாக சென்னையில் நள்ளிரவு காலமானார்.

அவருக்கு வயது 93.

**மக்களவை** உறுப்பினராக ஒரு முறையும்,

சட்டமன்ற உறுப்பினராக 4 முறையும் அவர் பணியாற்றியுள்ளார்.

சென்னை சாலிகிராமத்தில் உள்ள டாக்டர் தமிழிசை சௌந்தர்ராஜனின் இல்லத்தில் குமரி அனந்தனின் உடல் தற்போது பொதுமக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.

ஆளுநர் திரு.ஆர்.என்.ரவி, முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் உள்ளிட்டோர் அன்னாரது உடலுக்கு இன்று நேரில் அஞ்சலி செலுத்தினர்.

சட்டப்பேரவை எதிர்கட்சி தலைவர் திரு.எடப்பாடி கே. பழனிச்சாமியும் குமரி அனந்தனின் மறைவிற்கு இரங்கல் தெரிவித்துள்ளார்.

**********

**இரங்கல் தீர்மானம்**

தமிழை உயிர் மூச்சாக கொண்டு வாழ்ந்த இலக்கிய செல்வர் குமரி அனந்தனை போற்றிடும் வகையில் அவரது உடல் அரசு மரியாதையுடன் அடக்கம் செய்யப்படும் என்று முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் குமரி அனந்தனின் மறைவிற்கான இரங்கல் தீர்மானத்தின் மீது பேசுகையில் முதலமைச்சர் இதனை தெரிவித்தார்.

முன்னதாக குமரி அனந்தனின் உடலுக்கு நேரில் அஞ்சலி செலுத்திய முதலமைச்சர் நாடாளுமன்றத்தில் தமிழில் பேசுவதற்கான உரிமையை நிலைநாட்டியதற்கான பெருமை குமரி அனந்தனையே சேரும் என புகழாரம் சூட்டினார்.

**********

**சி.வி.கணேசன்**

தமிழ்நாட்டில் அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் உள்ள 50 விடுதிகள் 23 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும் என்று மாநில தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. சி.வி. கணேசன் தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் தமது துறை மானியக்கோரிக்கை மீதான விவாதத்தில் பேசிய அவர் திருக்குவளை அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் 3 கோடியே 50 லட்சம் ரூபாய் செலவில் புதிய மாணவர் விடுதி கட்டப்படும் என்றார்.

கடந்த 4 ஆண்டுகளில் 20 லட்சத்து 75 ஆயிரம் பேர் தொழிலாளர் நல வாரியத்தில் உறுப்பினர்களாக சேர்ந்துள்ளதாக கூறிய அவர், இளைஞர்களின் திறன்மேம்பாட்டிற்காக 42 தொழில்பயிற்சி மையங்கள் தொடங்கப்பட்டுள்ளதாக கூறினார்.

**********

**சட்டப்பேரவை கேள்வி நேரம்**

தமிழ்நாட்டில் 428 இடங்களில் 20 ஆண்டுகள் பழமையான பழுதடைந்த குடிநீர் குழாய்களை மாற்றி அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படுவதாக மாநில நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின்போது இதனை தெரிவித்த அவர் திருவண்ணாமலை கள்ளக்குறிச்சி விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் கூட்டுக்குடிநீர் திட்ட பணிகள் நடைபெறுவாக கூறிய அவர், ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி வத்ராயிருப்பு பேரூராட்சிக்கு பிளவக்கல் அணையிலிருந்து குடிநீர் வழங்குவதற்கான திட்ட அறிக்கை தயாரிக்கப்படுவதாக தெரிவித்தார்.

**பேரவையில் கேள்வி நேரத்தின்போது வெளியான மேலும் சில தகவல்கள்**

**கள்ளக்குறிச்சி மாவட்டம் வெள்ளிமலையில்** சுற்றுலா ஆய்வு மாளிகை கட்டித்தரப்படும் என்று மாநில பொதுப்பணித்துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு தெரிவித்துள்ளார்.

**வனப்பகுதிகளில் பழுதடைந்த சாலைகளை** சீரமைக்க 250 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக வனத்துறை அமைச்சர் திரு.பொன்முடி கூறியுள்ளார்.

**தென்காசியில் பால் குளிரூட்டும் நிலையம்** அமைக்கப்படும் என்று மாநில பால்வளத்துறை அமைச்சர் திரு.ராஜகண்ணப்பன் தெரிவித்துள்ளார்.

**வேலூர் தொகுதியில் 10 துணை மின்** நிலையங்களும், அணைக்கட்டு பகுதியில் 3 துணை மின் நிலையங்களும் அமைக்கப்படுவதாக மாநில மின்சாரத்துறை அமைச்சர் திரு.செந்தில்பாலாஜி கூறியுள்ளார்.

**********

**டி.ஆர்.பி.ராஜா**

காஞ்சிபுரம் மாவட்டம் ஒரகடம் தொழிற்பூங்காவில் ஆயிரம் கோடி ரூபாய் முதலீட்டில் அமைய உள்ள மடி கணினி மின்னணு உற்பத்தி ஆலைக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் முதலமைச்சர் முன்னிலையில் இன்று கையெழுத்தானது.

**********

**சமரச மையம்**

நாடுமுழுவதும் நீதிமன்றங்கள் மூலம் சமரச தினம் கொண்டாடப்படுகிறது.

சமரச தீர்வு மையத்தின் பயன்கள் குறித்த விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்தி வழக்குகளுக்கு விரைவான தீர்வு ஏற்படுவதை நோக்கமாக கொண்டு இத்தினம் கடைபிடிக்கப்படுகிறது.

காஞ்சிபுரம் மாவட்ட ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் நடைபெற்ற சமரச தீர்வு விழிப்புணர்வு பேரணியில் நீதியியல் துறையினர், தேசிய மாணவர் படையினர், நாட்டு நலப்பணி திட்ட மாணாக்கர் பங்கேற்று விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களை வழங்கினர்.

வேலூரில் நடைபெற்ற விழிப்புணர்வு ஊர்வலத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட வழக்கறிஞர்கள் பங்கேற்றனர்.

**ராணிப்பேட்டை ஒருங்கிணைந்த** நீதிமன்ற வளாகத்தில் நடைபெற்ற பேரணியில் ஏராளமான பள்ளி கல்லூரி மாணாக்கர் கலந்துகொண்டனர்.

**நாமக்கல்லில் மாவட்ட முதன்மை நீதிபதி** குருமூர்த்தி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் விழிப்புணர்வு பிரச்சார இயக்கம் தொடங்கிவைக்கப்பட்டு துண்டு பிரசுரங்கள் வழங்கப்பட்டன.

**********

**திருச்சி தண்ணீர் திறப்பு**

திருச்சி மாவட்டம் மணப்பாறை வட்டம் பொன்னணி ஆறு அணை 12 ஆண்டுகளுக்கு பின்னர் பாசனத்திற்காக இன்று திறக்கப்பட்டது.

இதன்மூலம் புதிய பழைய ஆயக்கட்டு பகுதிகளின் 2 ஆயிரத்து 101 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்.

**********

**சமயபுரம்**

திருச்சி சமயபுரம் அருள்மிகு மாரியம்மன் திருக்கோவில் சித்தரை தேர் திருவிழா வரும் 15ஆம் தேதி நடைபெறுவதை ஒட்டி மாவட்டத்திற்கு அன்று உள்ளூர் விடுமுறை விடப்பட்டுள்ளது.

அதற்கு பதிலாக அடுத்த மாதம் 3ஆம் தேதி வேலை நாளாக இருக்கும் என்று ஆட்சித்தலைவர் திரு.மா.பிரதீப்குமார் தெரிவித்துள்ளார்.

**********

**முத்ரா கடன்**

காஞ்சிபுரம் மாவட்டத்தில் பிரதமரின் முத்ரா கடன் உதவி திட்டத்தின் மூலம் ஏராளமானோர் பயனடைந்து வருவதாக இந்தியன் வங்கி மேலாளர் திரு.திலீப் தெரிவித்தார்.

**வாய்ஸ்**

**********

**கே.பி.ராமலிங்கம்**

டாஸ்மாக் ஊழலில் தொடர்புடையவர்கள் மீது அமலாக்கத்துறை விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மத்திய நிதியமைச்சரிடம் புகார் மனு வழங்கப்பட்டுள்ளதாக பிஜேபி மாநில துணை தலைவர் திரு.கே.பி.ராமலிங்கம் கூறியுள்ளார்.

சேலத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் பிஜேபி நிர்வாகிகள் கூட்டம் நாளைமுதல் வரும் 14ஆம் தேதிவரை நடைபெற உள்ளதாக குறிப்பிட்டார்.

இதன் ஒருபகுதியாக மத்திய அரசின் புதிய சட்டங்கள் மற்றும் புதிய திட்டங்கள் குறித்த விவரங்களை உள்ளடக்கிய காட்சி அரங்குகள் அமைக்கப்படும் என்றார்.

**********

**இருவரி**

**மகாவீர் ஜெயந்தியை ஒட்டி நாளை திருச்சி** மாவட்டம் உட்பட அனைத்து மாவட்டங்களில் உள்ள மதுபான சில்லரை விற்பனை கடைகளை மூட மாவட்ட நிர்வாகம் உத்தரவிட்டுள்ளது.

**விழுப்புரம், திருச்சி மாவட்டங்களில் வரும்** சனிக்கிழமை பொதுவிநியோக குறைதீர் நாள் கூட்டங்கள் நடைபெற உள்ளன.

**********

**பழனி**

பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவில் பங்குனி உத்திர திருவிழாவை ஒட்டி நாளைமுதல் 3 நாட்களுக்கு கட்டண தரிசனம் ரத்து செய்யப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**வாய்ஸ்**

**********

**கோவை குற்றாலம்**

கோவை குற்றாலம் பகுதியில் பராமரிப்பு பணிகள் நடைபெறுவதால் சுற்றுலா பயணிகள் அங்கு செல்ல இன்று தடை விதிக்கப்பட்டுள்ளது.

**********

**கிரிக்கெட்**

ஐ.பி.எல் 20-20 கிரிக்கெட் போட்டியில் அஹமதாபாத்தில் இன்று இரவு ஏழரை மணிக்கு குஜராத் டைட்டன்ஸ் - ராஜஸ்தான் ராயல்ஸை எதிர்கொள்கிறது.

**********